## In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 7/2020** **Date:02.12.2025**

**(PW1)- பிரான்சிஸ் என்ற மரிய பிரான்சிஸ்**

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் கொத்தனார் வேலை செய்கிறேன். எனக்கு தமிழ், ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் தமிழ் மட்டும் எழுத படிக்க தெரியும். நான் இந்த வழக்கில் என்ன பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளேன் என்றால் நீதி கேட்டு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து தான் கையாப்பம் செய்தேன் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது பற்றி தெரியாது.

2. இந்த வழக்கின் பட்டிகை சொத்து என்ன என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.இந்த வழக்கின் பட்டிகை சொத்து எனது தாத்தா சவரி முத்து என்பவருக்கு பாத்தியபட்ட சொத்து என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 12 சென்ட் ஆகும். மேற்படி 12 சென்ட் சொத்தில் பாகம் வைத்ததில் எனக்கு பாகமாக 4 சென்ட் சொத்து கிடைத்தது என்றால் சரிதான். அதே போல் பிரதிவாதிகளுக்கும் தலா 4 சென்ட் சொத்து பாகமாக கிடைத்தது என்றால் சரிதான்.

3. பாகம் வைக்கும் சமயத்தில் எனது சொத்தின் தெற்கு பக்கம் சூசை மிக்கேல் சொத்து இருக்கிறது என்றாலும் அதன் தென்புறம் 1ம் பிரதிவாதியின் சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி எனது பெரியப்பா பையன் என்றால் சரியல்ல, சித்தப்பா பையன் ஆவார். சூசை மிக்கேல் தற்போது உயிருடன் இல்லையென்றால் சரிதான். சூசை மிக்கேல் உயிருடன் இல்லாததால் அவருடைய சொத்தில் அவரது வாரிசுகளுக்கு பங்கு உண்டு என்றால் சரிதான்.

4. இந்த வழக்கில் பட்டிகை சொத்துகள் எப்போது பாகம் வைத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, அப்போது நான் சிறுவன். என்னிடம் காட்டப்படும் வாசாஆ. 1 ஆவணத்தில் பாக பிரிவினை 18.08.1982 ல் பாகம் ஏற்பட்டது என்பது தெரிய வருகிறது என்றால் சரிதான். மேற்படி வாசாஆ 1 ஆவணத்தில் மொத்த சொத்தின் சர்வே எண் 888/15 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு

பட்டிகை சொத்து எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. வாசாஆ. 1 ஆவணத்தில் உள்ள சொத்தின் பழைய சர்வே எண் 265 என்றால் சரிதான். சூசை மிக்கேல் எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். மேற்படி சூசை மிக்கேலுக்கும் எனக்கும் சண்டை ஏதும் இல்லையென்றால் சரிதான். வாசாஆ. 1 ஆவணம் எழுதும் போது நான் மைனர் என்றால் சரிதான். நான் தாக்கல்செ ய்துள்ள வாசாஆ. 5 ஆவணம் பதிவு செய்யப்படவில்லையென்றால் சரிதான். மரியஜெபஸ்தியான் எனது அண்ணன் என்றால் சரியல்ல, எனது சித்தப்பா ஆவார். வாசாஆ. 5 ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட்டுள்ள நபர்கள் யார் என்றால் எனது சித்தப்பா மற்றும் மாமா ஆவார்.

6. மேற்படி வாசாஆ. 5 ஆவணத்தில் உள்ள எனது சித்தப்பா கையெழுத்தும் வாசாஆ. 1 ஆவணத்தில் உள்ள கையெழுத்தும் வேறுபட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வாசாஆ 5 ஆவணத்தின் அடிப்படையில் தான் நான் தபசில் சொத்தில் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். வாசாஆ 5 ஆவணத்தை இயற்றும் போதும் நான் மைனராக தான் இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வாசாஆ 5 ஆவணத்தில் சொத்தின் புல எண் 888/15 A என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, 888/15 B என்று குறிப்பிடப்பட்டுள்ளது . மேற்படி வாசாஆ 5 ஆவணத்தில் 888/15 A என்று குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறான ஆவணம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. மேற்படி வாசாஆ 5 ஆவணத்தில் சாட்சிகளின் விலாசம் குறிப்பிடவில்லையென்றால் சரிதான், அவர்கள் அருகில் வசித்து வருவதால் குறிப்பிடவில்லை. மேற்படி வாசாஆ 5 ஆவணம் வழக்கிற்காக என்னால் பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்து 1982 முதல் 2010 வரை உட்பிரிவு செய்யாத நிலையில் வாசாஆ. 5 ஆவணத்திற்கு உட்பிரிவு செய்யப்பட்ட புல எண்ணான 888/15 A என்று 1982 ம் வருடமே குறிப்பிடப்பட்டுள்ளது போலியானது என்றால் சரியல்ல.

8. நான் பத்திரத்தில் எழுதி வாங்கியிருந்தால் உண்மை நிலவரம் தெரிந்து விடும் என்பதால் ஒரு தாளில் சாட்சிகள் ஏதும் இல்லாமல் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வாசாஆ 5 ஆவணம் சட்டபடி நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் எனவே அதன் படி நான் உரிமை கோர முடியாது என்றாலும் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து தற்போது 4ம் பிரதிவாதி சார்லஸ் பெஞ்சமின் பெயரில் உள்ள விவரம் எனக்கு

தெரியும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ. 8 ஆவணத்தில் பட்டிகை சொத்து 4ம் பிரதிவாதி பெயரில் இருப்பது துலங்குகிறது என்றால் சரியல்ல.

9. பட்டிகை சொத்து சூசை மிக்கேலின் மகன் சார்லஸ் பெஞ்சமின் பெயரில் இருந்தால் அவர்களுக்கு சொத்தை கொடுப்பதில் எனக்கு எந்த ஆட்சேபணையுமில்லையென்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் வீடு சூசை மிக்கேலின்சொத்தின் தெற்கு பக்கத்தில் உள்ளது என்றால் சரியல்ல, அது எனது வீடாகும். மேற்படி வீடு யாரால் கட்டப்பட்டது என்றால் எனது அம்மாவால் கட்டப்பட்டது. 1ம் பிரதிவாதி வீட்டை சுற்றி காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதி பஞ்சாயத்திடம் முறையான அனுமதி பெற்று வீடு கட்டி காம்பவுண்ட் சுவர் அமைத்துள்ளார் என்றாலும் எனவே அவரிடம் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணைதொடர்ச்சிக்காக 10.12.2025 தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)